Q3. **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) காலமும் இடமும் அறிந்து ஒரு செயலைச் செய்ய வேண்டியதன் தேவையைத் திருக்குறள்வழி விளக்குக. *20*

(b) அழற்படுகாதை காட்டும் மதுரையின் நிலையினை விளக்குக. *15*

(c) இறைவனின் பெருமைகளாக மாணிக்கவாசகர் சுட்டுவனவற்றை எழுதுக. *15*

Q4. **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) உலைக்கல் அன்ன பாறை ஏறிக் கொடுவில் எயினர் பகழி மாய்க்கும். *15*

(b) சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை. *20*

(c) திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் அங்கணி ரண்டுங் கொண்டெங்கள் மேல் நோக்குதியேல். *15*



Scanned with OKEN Scanner

## SECTION B

**Q5.** **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=*

(a) சேவகனால் ஏற்பட்ட சிரமங்களாகப் பாரதியார் குறிப்பிடுவனவற்றை எழுதுக. 10

(b) குடும்ப விளக்கின் மையக்கதாபாத்திரம் எது ? ஏன் ? 10

(c) ஆனந்தி அண்ணாமலைக்குக் கொடுத்த நூலில் இருந்தவை யாவை ? 10

(d) தமிழ்நாட்டின் தாழ்ந்த நிலைகளாகச் சி.என். அண்ணாதுரை சுட்டுவன யாவை ? 10

(e) வாலப்பகடை முத்துப்பட்டனுக்கு விதித்த நிபந்தனைகள் யாவை ? 10

**Q6.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) குடும்பவிளக்குத் தலைவி விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் முறைகளை விளக்குக. 20

(b) யாருக்கும் வெட்கமில்லை நாடகத்தின் மொழிநடை குறித்து எழுதுக. 15

(c) மலையருவியின் தாலாட்டுப் பாடல்கள் காட்டும் உறவுமுறைகள் குறித்து எழுதுக. 15

**Q7.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :**

(a) காமராசன் சித்தரிக்கும் மதுவின் செயல்பாடுகளை எழுதுக.

(b) ஜெயகாந்தனின் எழுத்துகள் "மனிதர்களின் நடவடிக்கைகளைக் கேலி செய்கின்றன" என்பதைக் குருபீடம் சிறுகதைத் தொகுப்பினைக் கொண்டு விளக்குக.

(c) முத்துப்பட்டன் கதை காட்டும் சாதிய முரண்பாடுகளை எழுதுக.



Scanned with OKEN Scanner

